Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House (A Heritage Hotel)
College House
Annameenakshi Restaurant (Veg.)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 77 | உள்ளூர் - 18.03.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 77 | வெளியூர் - 19.03.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

இந்த தவறுகளை செய்கிறீங்களா..? அப்ப அதிர்ஷ்டம் தொலைவில்..!

அனல் பறக்கும் தேர்தல் கள செய்திகள்!

4 முனைப்போட்டி யாருக்கு சாதகம்..?

'ஜன நாயகன்' மறு தணிக்கை; ரிலீஸ் ஆவதில் சிக்கல்!

## மீண்டும் அதிபர் ஆனார் கிம் ஜாங் உன்!



வடகொரியா, மார்ச். 18–

வடகொரியாவில் நடந்த பார்லிமென்ட் தேர்தலில் 99.93% ஓட்டுகளுடன் கிம் ஜாங் அன் தலைமையிலான கூட்டணி கட்சி வெற்றி பெற்றுள்ளது.

வட கொரியாவில் சர்வாதிகாரப் போக்கு அதிகம் என்பது நமக்கு தெரியும். அங்கு பல்வேறு கட்டுப்பாடுகள் உண்டு. அந்த நாட்டில் என்ன நடக்கிறது என்பதே மற்ற உலக நாடுகளுக்கு தெரியாது. அங்கு தேர்தல் என்பது பெயரளவுக்கே நடக்கிறது.

ஆளுங்கட்சியான தொழிலாளர் கட்சி தேர்ந்தெடுக்கும் வேட்பாளர்களுக்கு மக்கள் 100% ஒப்புதல் அளிக்கும் வகையில், எதிர்க்கட்சிகள் இன்றி, பெரும்பாலும் ஒரு வேட்பாளர் மட்டுமே நிறுத்தி தேர்தல் நடக்கும். இது ஜனநாயகமற்ற நடைமுறை என உலகம் முழுவதும் கருதப்படுகிறது. வடகொரியா உருவானது முதலே ஒரு கட்சி ஆட்சி முறை அமலில் உள்ளது. தாத்தா, தந்தை, பேரன் என தற்போது மூன்றாம் தலைமுறை வாரிசான கிம் ஜோங் உன் தலைமையில் ஆட்சி நடக்கிறது. கடந்த மார்ச் 15ம் தேதி பொதுத்தேர்தல் நடந்தது. தேர்தலில் 99.93% ஓட்டுகளுடன் கிம் ஜாங் அன் தலைமையிலான கூட்டணி கட்சி வெற்றி பெற்றுள்ளது என வட கொரியா அரசு ஊடகங்கள் தகவல் தெரிவிக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜாங்–கும் முக்கியமானவர் ஆவார். இவர் கல்லிம்கில் தொகுதியில் நின்று வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வுபெறும் மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பிரதமர் மோடி பாராட்டு..!



புதுடெல்லி, மார்ச். 18–

நாடாளுமன்ற மரபுகளையும் ஜனநாயக விழுமியங்களையும் வலுப்படுத்துவதில் மாநிலங்களவையில் ஓய்வுபெறும் உறுப்பினர்களின் பங்களிப்பை பிரதமர் நரேந்திர மோடி இன்று பாராட்டினார். பிரியாவிடை அமர்வின் போது பேசிய பிரதமர், மாநிலங்களவை என்பது அனுபவமும் ஞானமும் விலைமதிப்பற்றதாக இருக்கும் ஒரு தொடர்ச்சியான அமைப்பு என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய பிரதமர் மோடி, “அரசியலில் முற்றுப்புள்ளி இல்லை” என்று குறிப்பிட்டார். மேலும், பொதுச் சேவைப் பயணம் முறையான பதவிக்காலங்களுக்கு அப்பாற்பட்டுத் தொடர்கிறது என்றும் அவர் வலியுறுத்தினார். மூத்த தலைவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். இளம் உறுப்பினர்கள் அனுபவம் வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து உத்வேகத்தையும் வழிகாட்டுதலையும் பெற வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் பேசிய பிரதமர் மோடி, அவையில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதங்கள் நடைபெறுவதாகவும், அவற்றில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு தனித்துவமான பங்கு உண்டு என்றும் கூறினார். “அத்தகைய தருணங்களில், கட்சி எல்லைகளைக் கடந்து பரஸ்பர மரியாதை உணர்வு மேலோங்குகிறது. தங்கள் பதவிக்காலத்தை நிறைவுசெய்து அவையை விட்டு வெளியேறும் தலைவர்களிடம் நான் கூற விரும்புவது என்னவென்றால், அரசியலுக்கு முடிவே இல்லை,” என்றார் அவர். அரசியல் என்பது ஒரு தொடர்ச்சியான பயணம் என்றும், அதில் பங்களிப்புகள் முறையான பதவிக்காலங்களுக்கு அப்பாற்பட்டு நீள்கின்றன என்றும் பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார்.

மூத்த தலைவர்களின் வாழ்நாள் பங்களிப்புகளுக்குப் பாராட்டு

எச்.டி. தேவே கௌடா, மல்லிகார்ஜுன் கார்கே மற்றும் சரத் பவார் போன்ற மூத்த தலைவர்கள் தங்கள் வாழ்நாளின் கணிசமான பகுதியை நாடாளுமன்ற சேவைக்காக அர்ப்பணித்துள்ளனர் என்று பிரதமர் குறிப்பிட்டார். “இவ்வளவு நீண்ட அனுபவத்திற்குப் பிறகும், அனைத்து புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அர்ப்பணிப்புடன் அவைக்கு வந்து, சமூகத்தின் மீதான பொறுப்புகளை நிறைவேற்றுவது மூத்த தலைவர்கள் வெளிப்படுத்தும் ஊக்கமளிக்கும் குணங்களாகும். அவர்களின் பங்களிப்பை நான் பாராட்டுகிறேன்,” என்று கூறினார்.

மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங், அவை நடவடிக்கைகளை அமைதியாகவும் சமநிலையுடனும் நடத்தியதற்காக பிரதமர் மோடி அவரைப் பாராட்டினார். “ஹரிவன்ஷ் ஜி நீண்ட காலமாக அவையில் பொறுப்புகளை ஏற்கும் வாய்ப்பைப் பெற்றார். அவர் எழுதுவதில் திறமையானவர் மட்டுமல்ல, கடின உழைப்பாளியும் கூட. அவர் நாடு முழுவதும் பயணம் செய்து தனது கடமைகளை விடாமுயற்சியுடன் நிறைவேற்றியுள்ளார்,” என்று அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தின் கண்ணியத்தைக் காக்குமாறும், அனுபவம் வாய்ந்த தலைவர்களிடமிருந்து உத்வேகம் பெறுமாறும் உறுப்பினர்களை ஊக்குவித்த பிரதமர், ஜனநாயக மரபுகளை வலுப்படுத்துவதற்கு அவர்களின் வழிகாட்டுதல் இன்றியமையாதது என்றும் வலியுறுத்தி தனது உரையை நிறைவு செய்தார்.


மாநிலங்களவையில் குறைந்து வரும் நகைச்சுவை குறித்து பிரதமர் மோடி

மாநிலங்களவையில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ஒரு காலத்தில் இந்த சபை அதன் கலகலப்பான நகைச்சுவை மற்றும் நையாண்டிக்குப் பெயர் பெற்றிருந்தது என்றும், இருப்பினும் தற்போது அத்தகைய தருணங்கள் குறைந்து வருவதாகவும் குறிப்பிட்டார். பின்னர், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் ராம் தாஸ் அத்வாலே ஓர் 'என்றும் இளமை மாறாதவர்' (evergreen) என்று பாராட்டினார். மேலும், அத்வலே அங்கிருந்து விடைபெற்றாலும், அவர் எப்போதும் நகைச்சுவையையும் நையாண்டியையும் தாராளமாகப் பொழிந்து வந்ததால், அவரது இருப்பு தொடர்ந்து உணரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 'சுரண்டலுக்கு' முற்றுப்புள்ளி

# இனி விமானத்தில் 60% டிக்கெட்-களுக்கு கட்டணமில்லை..!

### மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அதிரடி அறிவிப்பு!!





புதுடெல்லி, மார்ச். 18–

இந்தியா தற்போது உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் உலக அளவில் 3–வது இடத்தை வகிக்கிறது என்பது உறுதியான உண்மை. இந்திய விமான நிலையங்கள் தினமும் 5 லட்சத்திற்கும் அதிகமான பயணிகளைக் கையாளுகின்றன என்பது தற்போதைய அதிகாரப்பூர்வத் தரவாகும்.

இந்திய விமானப் போக்குவரத்து துறையில் கடந்த சில மாதங்களாக பல்வேறு மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது, இது விமான நிறுவனங்களுக்கு பெரும் சிக்கலாக இருந்தாலும், பயணிகளுக்கு பெரிய அளவில் பலன் அளித்து வருகிறது. இதில் முக்கியமாக இன்று வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு இந்திய விமான பயணிகள் மத்தியில் பெரிய அளவில் வரவேற்பை பெற்றுள்ளது என்றால் மிகையில்லை. இந்திய மக்களுக்கு விமானப் பயணம் வெளிப்படையானதாகவும், எளிதானதாகவும், சிரமமற்றதாகவும் மாற்றும் நோக்கில், மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் புதிய அறிவிப்பை வெளியிட்டு அசத்தியுள்ளது.

புதிய விதிகளின்படி, ஒவ்வொரு விமானத்திலும் குறைந்தது 60% இருக்கைகள் அதாவது டிக்கெட்–கள் எவ்விதமான கூடுதல் கட்டணமும் இன்றி வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு ள்ளது. குறிப்பாக, இருக்கை தேர்வுக்காக வசூலிக்கப்படும் கூடுதல் கட்டணங்கள் குறித்து பயணிகள் மத்தியில் எழுந்திருந்த புகார்களுக்கு தீர்வாக இந்த அறிவிப்பு வந்துள்ளது. இந்த நடவடிக்கை மூலம் அனைத்து பயணிகளுக்கும் சமமான முன்னுரிமை கிடைக்கும் வகையில் “இலவச இருக்கை ஒதுக்கீடு” கட்டாயமாக்கப்பட்டுள்ளது. குடும்ப பயணிகளுக்கு முக்கிய மாற்றம் ஒரே PNR–ல் (ஒரே முன்பதிவு) பயணம் செய்பவர்கள், குறிப்பாக குடும்பங்கள் மற்றும் குழுக்கள், அருகருகே அமர்வதை விமான நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது நீண்டநாள் பயணிகளின் முக்கிய கோரிக்கையாக இருந்தது வருகிறது.

**விதிகளில் வெளிப்படைத் தன்மை:**

விளையாட்டு உபகரணங்கள், இசைக்கருவிகள் மற்றும் செல்லப்பிராணிகளை எடுத்துச் செல்லும் விதிமுறைகளில் தெளிவான மற்றும் பயணிகளுக்கு ஏதுவான கொள்கைகளை விமான நிறுவனங்கள் அமல்படுத்த வேண்டும் என அரசு வலியுறுத்தி யுள்ளது. பாதுகாப்பு விதி முறைகளைப் பின்பற்றியபடி, இந்த சேவைகள் சீர்படுத்தப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

**தாமதம் மற்றும் ரத்து :**

விமான தாமதம், ரத்து அல்லது பயண அனுமதி மறுப்பு போன்ற சூழ்நிலைகளில், பயணிகள் விதிகளை கடுமையாக நிலைப்பாட்டு உடன் பின்பற்ற வேண்டும் என்று அரசு தெளிவுபடுத்தி யுள்ளது. இது பயணிகளின் நம்பிக்கையை உயர்த்தும் முக்கியமான நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இப்புதிய மாற்றங்கள், இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் விமானப் பயண சந்தையில் ஒரே மாதிரியான நடைமுறைகளை கொண்டு வரவும், புகார்களை குறைக்கவும், பயண அனுபவத்தை மேம்படுத்தவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## டீசல் இன்ஜினை மின்சார இன்ஜினாக மாற்றியதால் ரூ.6 ஆயிரம் கோடி சேமித்தது ரயில்வே!




புதுடில்லி, மார்ச். 18–

ரயில் இயக்கத்தை டீசல் இன்ஜினில் இருந்து மின்சார இன்ஜினுக்கு மாற்றியதால் இந்திய ரயில்வே 6,000 கோடி ரூபாயைச் சேமித்து ள்ளது என மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.




## திமுகவில் தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2-வது நாளாக நேர்காணல்!

சென்னை, மார்ச். 18–

தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற திமுக தேர்தல் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

திமுக தரப்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களிடம் விருப்ப மனு பெறப்பட்டது. தற்போது அவர்களிடம் திமுக தலைவர் ஸ்டாலின் தலைமையிலான மூத்த நிர்வாகிகள் குழு நேர்காணல் நடத்தி வருகிறது. நேற்று (மார்ச் 17) புதுச்சேரி உள்பட சில தொகுதிகளுக்கு நேர்காணல் நடைபெற்றது.

இதையடுத்து இன்று 2வது நாளாகவும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக வேட்பாளர் நேர்காணல் நடைபெற்று வருகிறது. இன்று தென்மாவட்டங்களில் 9 மாவட்டங்களை சேர்ந்த 22 தொகுதிகளில் விருப்ப மனு அளித்த 750 பேரிடம் இன்று நேர்காணல் நடைபெற்று வருகிறது.

## சாதனைப் பயணம் தொடரும்; தமிழகம் வளர்ச்சி பாதையில் நடைபோடும்: முதல்வர் ஸ்டாலின் உறுதி!



சென்னை, மார்ச். 18–

“நாம் ஒற்றுமையாக ஓரணியில் இருக்கும் வரை இந்தச் சாதனைப் பயணம் தொடரும். தமிழகம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் நடைபோடும்” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்து உள்ளார்.

திமுக அரசின் திட்டங்கள் குறித்து ஒருவர் சமூக வலைதளத்தில் பகிர்ந்த வீடியோவை முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார். அந்த வீடியோவில், “ என் வாழ்நாளில் திமுகவுக்கு ஓட்டு போட்டது கிடையாது. அது என்ன மேஜிக் என்று தெரியவில்லை. இந்த 2026 திமுகவுக்கு தான் நான் ஓட்டு போட போகிறேன்.


முதல்வர் ஸ்டாலின் நிறைய திட்டங்களை கொண்டு வந்துள்ளார். அவர் கொண்டு வந்துள்ள ஒரு திட்டத்தை ரத்து செய்தாலும் தமிழகத்தில் புரட்சி வெடிக்கும்” என கூறியுள்ளார். இந்த வீடியோவை மேற்கோள் காட்டி முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

ஆட்சிப் பொறுப்பேற்றதும், “வாக்களித்தவர்கள் மகிழ்ச்சியடைவது மட்டுமல்ல; வாக்களிக்காதவர்களும், இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று எண்ணும்படியான ஆட்சியை வழங்குவேன்” என்று சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளேன் என்பதற்கு இந்த வீடியோவே சான்று.

நாம் ஒற்றுமையாக ஓரணியில் இருக்கும்வரை இந்தச் சாதனைப் பயணம் தொடரும். தமிழகம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் நடைபோடும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 18.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 04-ம் தேதி

# ஈரான் போருக்கு மத்தியில் தங்கத்தை மறந்த இந்தியர்கள்..!!



ஈரான் நாட்டில் ஒவ்வொரு நாளும் போர் தீவிரமடைந்து வருகிறது. தொடர்ந்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவம், ஈரான் மீது தாக்குதல் நடத்துகின்றன. ஈரானும் பதில் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. ஈரான் போர் காரணமாக எல்பிஜி சிலிண்டருக்கு இந்தியாவில் கட்டுப்பாடு நிலவுகிறது. மற்றொருபுறம் பெட்ரோல் டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு இடங்களிலும் டீ, காபி விலை உயர்த்தப்பட்டு இருக்கிறது, உணவகங்கள் மூடப்பட்டிருக்கின்றன. திறக்கப்பட்டிருக்கும் உணவகங்களிலும் கூட குறிப்பிட்ட வகையிலான உணவுகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன. இந்த சூழலுக்கு மத்தியில் இந்தியர்கள் தங்கம் என ஒரு விஷயம் இருப்பதையே மறந்து விட்டார்கள். கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் அனைவரும் தங்கம் குறித்து தான் அனைவருமே பரபரப்பாக பேசி வந்தார்கள். போட்டி போட்டுக் கொண்டு மக்கள் தங்கத்தை வாங்கினார்கள் தங்கத்தில் முதலீடு செய்தார்கள். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஈரான் போர் காரணமாக இந்தியாவில் தங்கம் விற்பனை பெருமளவு சரிவடைந்து இருக்கிறதாம். பிப்ரவரி மாத இறுதி மற்றும் மார்ச் மாதத்தின் தற்போது வரை இந்தியாவில் தங்க நகை விற்பனை பெருமளவில் குறைந்து விட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாடிக்கையாளர்களிடம் கடைக்கு வந்து நகை வாங்க வேண்டும் என்ற ஆர்வமே இல்லை அனைவருமே தங்கள் கைவசம் இருக்கும் பணத்திற்கு எரிபொருள் , கேஸ் மற்றும் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கே முன்னுரிமை தருகிறார்கள். இதனால் நகைக்கடைகள் அனைத்தும் காற்று வாங்குகிறது. தங்கத்தின் விலையும் பெரிய அளவில் உயராமல் இருக்கிறது. ஜனவரியில் தான் தங்கம் விலை பல மடங்கு உயர்ந்தது அதன் பிறகு சரிந்தது , பொதுவாக விலை உயர்ந்த பின்னர் குறைகிறது என்றால் அதிக அளவில் மக்கள் வந்து தங்கம் வெள்ளி நகைகளை வாங்குவார்கள். ஆனால் இந்த முறை மக்களிடையே இதற்கு வரவேற்பு இல்லை.

ஈரான் போர் தொடங்கியது பிப்ரவரி 28ஆம் தேதி. இந்தியாவில் பிப்ரவரி 27ஆம் தேதி அன்று 24 கேரட் தங்கம் 10 கிராம் விலை 1,59,097 ரூபாயாக இருந்தது. அதுவே மார்ச் 16ஆம் தேதி 1, 55, 714 ரூபாய் என சரிவடைந்து இருக்கிறது. அதாவது ஈரான் போருக்கு பிறகு இந்தியாவில் தங்கம் விலை பெருமளவு குறைந்திருக்கிறது. தங்கம் விலை குறைந்தும் மக்கள் கடையில் வந்து தங்கம் வாங்க ஆர்வம் காட்டாததால் நகை விற்பனை டல் அடிப்பதாக காணப்படுகிறது

. ஈரான் போர்க்காரணமாக கச்சா எண்ணெய் விலைகள் உயர்ந்த வண்ணம் இருக்கின்றன. ஒரு பேரல் கச்சா எண்ணெய் விலை 106 டாலர்கள் என்ற அளவை எட்டி இருக்கிறது. இது விரைவில் 120 டாலர்கள் கடந்து விற்பனையாகும் என சொல்லப்படுகிறது. இதனால் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவடைந்திருக்கிறது. அந்த வகையில் உலக சந்தையில் டாலரின் மதிப்பு உயர்ந்து வருவதால் தங்கம் மற்றும் வெள்ளியின் விலைகள் குறைந்துள்ளன. அது இந்திய சந்தையிலும் எதிரொலிக்கிறது.

# தமிழகத்தில் கட்டணம் உயரும் 60 சுங்கச்சாவடிகள்: பட்டியல் வெளியிட்டது நெடுஞ்சாலை ஆணையம்!

சென்னை, மார்ச். 18–

தமிழகத்தில் ஏப்., 1ம் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்பட உள்ள சுங்கச்சாவடிகளின் பட்டியலை, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் 6,600 கி.மீ., தேசிய நெடுஞ் சாலைகள், அண்டை மாநிலங்களுடன் இணைக்கப்பட்டு உள்ளன.

இவற்றின் வழியாக, தினமும் ஆயிரக்கணக்கான சரக்கு வாகனங்கள், அரசு மற்றும் ஆம்னி பஸ்கள், பயணியர் வாகனங்கள் உள்ளிட்டவை பயணித்து வருகின்றன. இச்சாலைகளை பயன்படுத்தும் வாகனங்களிடம் கட்டணம் வசூலிக்க, 77 இடங்களில் சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாக, 2024 – 25ம் ஆண்டு, 4,300 கோடி ரூபாய் சுங்க கட்டணம் வசூல் செய்யப்பட்டது.

நடப்பாண்டு, 4,100 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்யப்பட்டு உள்ளது. இதில் அதிகபட்சமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தொப்பூர் சுங்கச்சாவடியில், 275 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டு உள்ளது.

சுங்கச்சாவடிகளில் ஒவ்வொரு ஆண்டும், 5 சதவீதம் கட்டணத்தை உயர்த்திக்கொள்ள, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, ஏப்., 1ம் தேதி முதல், தமிழகத்தில் உள்ள 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட உள்ளது.

இந்த சுங்கச்சாவடிகள் பட்டியலை, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளியிட்டுள்ளது. இந்த சுங்கச்சாவடிகளில் குறைந்தபட்சம் 10 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை உயர்த்தப்பட உள்ளது.

**கட்டணம் உயரும் சுங்கச்சாவடிகள் விபரம்: மாவட்டம் – சுங்கச்சாவடி – அமைவிடம்**


விழுப்புரம் – மொரட்டாண்டி
வேலூர் – பள்ளிகொண்டா
திருப்பத்தூர் – வாணியம்பாடி
கோவை – கணியூர்
கிருஷ்ணகிரி – கிருஷ்ணகிரி




செங்கல்பட்டு – பரனூர்
விழுப்புரம் – ஆத்தூர்
சென்னை – மாத்தூர்
திருவள்ளூர் – நல்லூர்
சென்னை – சூரப்பட்டு
சென்னை – வானகரம்
காஞ்சிபுரம் – ஸ்ரீபெரும்புதூர்
திருவண்ணாமலை – சென்னசமுத்திரம்
திருவள்ளூர் – எஸ்.வி.புரம்
திருவள்ளூர் – பட்டரைபெரும்புதூர்
திருச்சி – கல்லக்குடி
அரியலூர் – மணகெதி
செங்கல்பட்டு – கருங்குழி
விழுப்புரம் – நங்கிளி – கொண்டான்
திருவண்ணாமலை – கரியமங்கலம்
கிருஷ்ணகிரி – நாகம்பட்டி
கிருஷ்ணகிரி – கரகத்தஹள்ளி
கடலூர் – கொத்தட்டை
விழுப்புரம் – கெங்கராம்பாளையம்
விழுப்புரம் – சேலியமேடு
கள்ளக்குறிச்சி – கீழ்குப்பம்

தமிழகத்தில் கட்டணம் உயரும் 60 சுங்கச்சாவடிகள் பட்டியல்; நெடுஞ்சாலை ஆணையம் வெளியீடு
தமிழகத்தில் கட்டணம் உயரும் 60 சுங்கச்சாவடிகள் பட்டியல்; நெடுஞ்சாலை ஆணையம் வெளியீடு
கடலூர் – பொன்னலகரம்
வேலூர் – வல்லம்
திருவண்ணாமலை – இனம்கரியாந்தல்
விழுப்புரம் – தென்னமாதேவி
கிருஷ்ணகிரி – கதவணி
திருப்பூர் – வேலம்பட்டி
கோவை – மதுக்கரை
தர்மபுரி – புதுப்பட்டி
திருப்பூர் – பொங்கலூர்
திருச்சி – வாழவந்தான்கோட்டை
மதுரை – கப்பலூர்
விருதுநகர் – எட்டூர்வட்டம்
தூத்துக்குடி – சாலைபுதூர்
திருநெல்வேலி – நாங்குனேரி
புதுக்கோட்டை – பூதக்குடி
மதுரை – சிட்டம்பட்டி
புதுக்கோட்டை – லெட்சுமணப்பட்டி
புதுக்கோட்டை – லெம்பாலக்குடி
சிவகங்கை – கோடிகோட்டை
ராமநாதபுரம் – வெண்ணாத்தூர்
புதுக்கோட்டை – பழைய கந்தர்வகோட்டை
சிவகங்கை – செண்பகம்பேட்டை
சிவகங்கை – திருபாச்சேத்தி
ராமநாதபுரம் – போகலூர்
திருநெல்வேலி – வாகைகுளம்
கன்னியாகுமரி – திருப்பதிசாரம்
தேனி – உப்பார்பட்டி
திண்டுக்கல் – சத்திரபட்டி
தூத்துக்குடி – புதூர்பாண்டியபுரம்
திருவாரூர் – கோவில்வேணி
தஞ்சாவூர் – வேம்புகுடி
தஞ்சாவூர் – மாணம்பாடி
மதுரை – எலியார்பத்தி
திண்டுக்கல் – புதூர்

# உங்கள் வீட்டில் இந்த தவறுகளை செய்கிறீங்களா..? அப்ப அதிர்ஷ்டம் உங்களை விட்டு வெகு தொலைவில்..!






சாஸ்திரத்தின் மீதான மக்களின் ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பலரும் தங்கள் வீடு வாஸ்து சாஸ்திரத்திற்கு இணங்க அமைய வேண்டும் என்று விரும்புகின்றனர். வாஸ்து சாஸ்திரத்தின்படி, ஒரு வீட்டின் அமைப்பு, அதன் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வீட்டிற்குள் நிலவும் வளிமண்டலம் ஆகியவை நமது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாக நம்பப்படுகிறது. வீட்டில் வாஸ்து குறைபாடுகள் ஏதேனும் இருந்தால், குடும்பத்தில் பிரச்சனைகள், நிதி நெருக்கடிகள் மற்றும் மன அமைதியின்மை ஆகியவை ஏற்பட வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்து மரபில் வாஸ்து சாஸ்திரம் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. வாஸ்து சாஸ்திரத்தின்படி, நாம் வசிக்கும் வீட்டின் தூய்மை, ஒழுங்குமுறை மற்றும் அங்கு கடைப்பிடிக்கப்படும் சடங்குகள் ஆகியவை அனைத்தும் நமது வாழ்க்கையைப் பாதிக்கின்றன. நாம் அறியாமலேயே சில சிறிய தவறுகளைச் செய்கிறோம். அத்தவறுகள் வீட்டில் எதிர்மறை ஆற்றலை அதிகரிக்கக்கூடும் என்று வாஸ்து நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இந்த எதிர்மறை ஆற்றலானது நமது வளர்ச்சி, அதிர்ஷ்டம் மற்றும் குடும்ப அமைதி ஆகியவற்றைப் பாதிக்கக்கூடும்.

சில பழக்கவழக்கங்கள் வீட்டின் வளர்ச்சிக்குத் தடையாக அமையக்கூடும். குறிப்பாக, வீட்டை எப்போதும் தூய்மையாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். அழுக்கடைந்த அல்லது தேவையற்ற பொருட்களை வீட்டில் நீண்ட நாட்களுக்கு வைத்திருப்பது நல்லதல்ல. இத்தகைய பொருட்கள் வீட்டில் எதிர்மறை ஆற்றலை அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, வீட்டின் பிரதான நுழைவாயில், சமையலறை மற்றும் பூஜை அறை போன்ற இடங்களை எப்போதும் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும்.

மற்றொரு முக்கியமான விஷயம், காலையில் தாமதமாகத் தூக்கத்திலிருந்து எழும் பழக்கமாகும். பலருக்கும் காலையில் தாமதமாகத் தூங்கி எழும் பழக்கம் உள்ளது. வாஸ்து சாஸ்திரத்தின்படி, இது ஒரு நல்ல பழக்கம் அல்ல. காலையில் அதிகாலையிலேயே எழுந்து, வீட்டின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்தால், நேர்மறை ஆற்றல் வீட்டிற்குள் நுழையும். இது நமது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, சமையலறையானது மிகவும் புனிதமான ஒரு இடமாகக் கருதப்படுகிறது. இந்து மரபில், சமையலறையானது மகாலட்சுமி தேவியின் இருப்பிடமாகப் போற்றப்படுகிறது. எனவே, சமையலறையை எப்போதும் தூய்மையாக வைத்துக்கொள்வது மிக அவசியமாகும். பயன்படுத்திய பாத்திரங்களை நீண்ட நேரத்திற்குச் சுத்தம் செய்யாமல் வைத்திருப்பதோ அல்லது சமையலறையைத் தூய்மையின்றி வைத்திருப்பதோ, வீட்டில் அமைதியையும் செல்வத்தையும் குறைத்துவிடும் என்று கூறப்படுகிறது.

மேலும், பழுதடைந்த பொருட்களை வீட்டில் நீண்ட நாட்களுக்கு வைத்திருப்பதும் நல்லதல்ல. உதாரணமாக, உடைந்த கண்ணாடிகள், பழுதடைந்த கடிகாரங்கள் மற்றும் உடைந்த பாத்திரங்கள் போன்றவற்றை வீட்டில் வைத்திருக்கக் கூடாது. இவை வீட்டில் எதிர்மறை ஆற்றலை அதிகரிப்பதாக வாஸ்து நிபுணர்கள் கூறுகின்றனர். எனவே, தேவையற்ற பொருட்களை அவ்வப்போது அகற்றுவது சிறந்தது.

சில எளிய பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம், வீட்டில் உள்ள வாஸ்து தோஷங்களைக் குறைக்க முடியும். வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல், அதிகாலையில் கண் விழித்தல், சமையலறையைத் தூய்மையாகப் பராமரித்தல், பழுதடைந்த பொருட்களை அகற்றுதல் மற்றும் தினமும் பூஜைகள் செய்தல் போன்ற பழக்கங்கள், வீட்டில் அமைதியையும் செழிப்பையும் கொண்டுவர உதவுவதாக வாஸ்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

# இசுஸு மோட்டார்ஸ் இந்தியா நடத்தும் “ஐ-கேர் ப்ரீ சம்மர் முகாம்” கோடை காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சேவை மற்றும் சலுகைகள்!

சென்னை மார்ச். 18–


இசுஸு மோட்டார்ஸ் இந்தியா, அதன் D–MAX பிக் அப் மற்றும் SUV வாகனங்களுக்கான “இசுஸு ஐ–கேர் ப்ரீ சம்மர் முகாம்” (‘ISUZU I–Care Pre Summer Camp’) ஐ நடத்தவுள்ளது. இந்த முகாம், வாடிக்கையாளர்களுக்கு கோடை காலத்தில் பிரச்சினை அற்ற ஓட்டுநர் அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன், முன்காப்பு பராமரிப்பு சரிபார்ப்பு சேவைகள் மற்றும் சிறப்பு சலுகைகளை வழங்கும் வகையில் நடைபெறுகிறது. முகாம் காலம் மற்றும் இடம்: 2026 மார்ச் 23 முதல் 28 வரை, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து இசுஸு அங்கீகாரம் பெற்ற சேவை நிலையங்களில் நடைபெறும். இதில், ஆக்ரா, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், மும்பை, மதுரை, திருச்சி, திப்ருகார் உள்ளிட்ட 80 க்கும் மேற்பட்ட நகரங்கள் வாடிக்கையாளர்கள் பயன் பெறலாம்.

முன்பதிவு மற்றும் தொடர்பு: வாடிக்கையாளர்கள் தங்கள் அருகாமையிலுள்ள இசுஸு விற்பனையாளர் நிலையத்தை அழைக்கலாம் அல்லது isu–zu.in/servicebooking.html இணையதள முகவரிக்கு செல்லலாம். மேலதிக தகவல்களுக்கு 1800 4199 188 (இலவச சேவை எண்) க்கு தொடர்பு கொள்ளலாம்.

# அதிரடி ஆட்டக்காரர் இஷான் கிஷன், Ai+ ஸ்மார்ட்போனுடன் கைகோர்க்கிறார்!

சென்னை , மார்ச். 18–

அதே சிந்தனையால் பிணைக்கப்பட்ட அதாவது, லட்சியம் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளத் தேவையில்லை எனும் சிந்தனையால் — ஒரு பிராண்டையும் ஒரு கிரிக்கெட் வீரரையும் இந்த கூட்டணி ஒன்றிணைக்கிறது. short 3 paragraph with important key point all name covered Ai+ Smartphone நிறுவனம் இன்று கிரிக்கெட் வீரர் இஷான் கிஷன் உடன் ஒரு பிரத்யேக பிராண்ட் கூட்டணியை அறிவித்துள்ளது. இந்த இணைப்பு, கனவுகள் அல்லது ஆசைகள் எப்போதும் அணுகலால் கட்டுப்படக் கூடாது எனும் பகிர்ந்த நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. Ai+ ஸ்மார்ட்போன் தனது தொழில்நுட்பத்தையும், மாறாத




செயல்திறனையும், புதிய வடிவமைப்புடன் எளிதாக அணுகக்கூடிய விலையில் வழங்கும் தனித்தன்மையுடன் வியத்தகு.

Ai+ Smartphone–இன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் NxtQuantum Shift Technologies நிறுவனர் மாதவ் ஷேத் கூறியபடி, இஷான் கிஷன் தனது இயல்பான ஆட்டத்தைக் கொண்டு தனது இடத்தை வென்றெடுத்தார். அவரைப் போல, நோக்கத்துடன் முன்னோக்கிச் செல்லும் மக்களுக்கு தொழில்நுட்பமும் உதவியாக இருக்க வேண்டும்; ‘Nova Series’ அறிமுகப்படுத்தும் இந்த புதிய பயணத்தில் இஷான் கிஷன் இணைந்திருப்பது இதே உணர்வை பிரதிபலிக்கிறது.

இந்த கூட்டணியின் வாயிலாக, வரும் மாதங்களில் Ai+ ஸ்மார்ட்போனின் விளம்பரங்கள், பிராண்ட் முன்னெடுப்புகள் மற்றும் கிரிக்கெட் சார்ந்த ‘திரைக்குப் பின்னான’ காட்சிகள் அனைத்திலும் Ishan Kishan இடம்பெறும். லட்சியம் ஒருபோதும் சமரசம் செய்யக்கூடாது எனும் பகிர்ந்த தத்துவத்தால் பிராண்டும் வீரரும் இணைந்துள்ள இந்த இணைப்பு, புதிய தொழில்நுட்ப அனுபவங்களையும் ரசிகர்களுடன் பகிரும் வாய்ப்பாக அமைகிறது.

# தேனியில் அ.தி.மு.க கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்!



தேனி, மார்ச் 18–

தேனி மாவட்டத்தில் அ.தி.மு.க. கூட்டணி கட்சிகளின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தமிழகத்தில் நடந்துவரும் பாலியியல் வன்கொடுமை, சட்டம்– ஒழுங்கு சீர்கேடுகளை கண்டித்தும் தடுக்க தவறிய தி.மு.க அரசை கண்டித்தும் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்தார். அதன்படி தேனி பங்களாமேடு பகுதியில் அ.தி.மு.க. கூட்டணி கட்சிகளின் சார்பில்ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் ராமர் தலைமை தாங்கினார். மேற்கு மாவட்ட செயலாளர் ஜக்கையன் முன்னிலை வகித்தார்.ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க அரசினை கண்டித்து பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ.க மாவட்ட தலைவர் ராஜபாண்டியன், அ.ம.மு.க.மாவட்ட செயலாளர் காசிமாயன்,அ.தி.மு.க தேனி நகர செயலாளர் வக்கீல் கிருஷ்ணகுமார், ஆண்டிபட்டி ஒன்றிய செயலாளர் லோகிராஜன், கூடலூர் நகர செயலாளர் அருண்குமார், முத்துச்சாமி, கதிர்காமு உள்பட தென் இந்திய பார்வர்டு பிளாக் கட்சி நிர்வாகிகள்,பா.ம.க, தா.ம.க.கட்சி நிர்வாகிகள் உள்ளபட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாட்டில் 48% விநியோக கூட்டாளர்கள் ஈவி-க்களுக்கு மாற ஆர்வமாக உள்ளதாக ஃபிளிப்கார்ட் ஆய்வு தகவல்!

சென்னை , மார்ச். 18–

ஃபிளிப்கார்ட், இந்தியா முழுவதும் 6,000–க்கும் மேற்பட்ட விஷ்மாஸ்டர்கள் (விநியோகக் கூட்டாளர்கள்) மீது நடத்தப்பட்ட “The Last–Mile Leap: Empowering Delivery Fleets to Accelerate India’s Electric Mobility Transition” ஆய்வறிக்கையை வெளியிட்டது. இந்த ஆய்வில் தமிழ்நாட்டில் 48% விநியோகக் கூட்டாளர்கள் மின்சார வாகனங்கள் (EVs) பரிமாற்றத்தை ஏற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். நாட்டளவில், சுமார் 46% பங்கேற்பாளர்கள் ஈவிக்கு மாற விரும்புகிறார்கள், ஆனால் 94.3% பேர் இன்னும் பெட்ரோல் இயங்கும் இரு சக்கர வாகனங்களை பயன்படுத்துகின்றனர். நிதி ஆதரவு, சார்ஜிங் உள்கட்டமைப்பு



மற்றும் பராமரிப்பு ஆதரவு ஆகியவை முக்கிய தடைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

ஆய்வின் அடிப்படையில், இந்தியாவில் கடைசி மைல் விநியோக குழுக்களின் பயணத் தூரங்கள் மின்சார இருசக்கர வாகனங்களின் செயல்பாட்டு வரம்பில் மிகவும் பொருத்தமானவை: 29% பங்கேற்பாளர்கள் ஒரு நாளைக்கு 40–60 கிமீ, 21.8% பங்கேற்பாளர்கள் 60–80 கிமீ பயணம் செய்கிறார்கள். இதனால் எரிபொருள் செலவை மாதம் ₹2,000₹5,000 வரை குறைக்க முடியும். ஃபிளிப்கார்ட் குழுமத்தின் நீடித்தத்தன்மைத் துறைத் தலைவர் நிஷாந்த் குப்தா கூறியதாவது, EVs செயல்பாட்டுச் செலவுகளை குறைத்து வருமான நிலைத்தன்மையை மேம்படுத்தும் திறன் கொண்டதாகும்.

ஆய்வறிக்கை மேலும் வலியுறுத்தியது, அதிக அளவில் விநியோக வாகனங்களை மின்மயமாக்க அதிக ஒருங்கிணைந்த சூழலமைப்பு தேவையுள்ளது. இதற்கான முக்கிய உந்துசக்திகள்: புதுமையான நிதி மாதிரிகள் (வாடகை/குறைந்த வட்டிக் கடன்), சார்ஜிங் – அஸ் – சர்வீஸ், மேம்பட்ட EV வடிவமைப்புகள், பயிற்சி/அறிமுக திட்டங்கள் மற்றும் பராமரிப்பு நெட்வொர்க்குகள். கிளைமேட் குரூப் இந்தியா நிர்வாக இயக்குநர் திவ்யா ஷர்மா கூறியதாவது, இந்த வகை அதிகப் பயன்பாடு கொண்ட நகர்ப்புற கடைசி மைல் விநியோகத்திலே மின்சார மாற்றத்தை விரைவுபடுத்த முடியும் என தெரிவித்தார்.

# பெருமாநல்லூரில் கபடி போட்டி!



திருப்பூர், மார்ச் 18–

இந்து சமத்துவ கட்சி மற்றும் விடியல் கபடி குழு இணைந்து நடத்திய மாபெரும் கபடி போட்டி பெருமாநல்லூரில் மாவட்ட தலைவர் சொ கார்த்தி மாநில பொதுச் செயலாளர் அ செல்வம் மாநில செயலாளர் மா சிவா முன்னிலையில் நடைபெற்றது இதில் இந்து மக்கள் இயக்கம் மாநில தலைவர் ப குமரேசன் மற்றும் கட்சியின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர் வெற்றி பெற்றவர்களுக்கு கட்சியின் நிறுவனர் மக்கள் சேவகர் உழைப்பாளி பூ பாலு பரிசுகளை வழங்கினார் உடன் எல் ஜி மருத்துவமனை உரிமையாளர் லதா மகேஸ்வரி கலந்து கொண்டு சிறப்பித்தார் மேலும் கபடி போட்டியில் முடியும் வரை இலவசமாக மருத்துவ சிகிச்சையும் கொடுத்தார் இந்த கபடி நிகழ்ச்சியை பொதுமக்கள் ஆர்வத்தோடு கண்டு ரசித்தனர்

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### மதிய வேளையில் குட்டித் தூக்கம் போடுவதற்கு முன் இதை தெரிஞ்சுக்கோங்க..!



மதிய உணவுக்குப் பிறகு ஒரு குட்டித் தூக்கம் போடும் பழக்கம் பலருக்கு உண்டு. சிலர் அதை சோம்பேறித்தனமாகக் கருதுகிறார்கள், மற்றவர்கள் அதை சோர்வைப் போக்க ஒரு வழியாகப் பார்க்கிறார்கள். இருப்பினும், மதியத் தூக்கம் அனைவருக்கும் ஒரே மாதிரியாக வேலை செய்யாது என்றும், அது நாம் எடுக்கும் நேரம் மற்றும் தூக்கத்தின் கால அளவைப் பொறுத்தது என்றும் மருத்துவ நிபுணர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

டெல்லி எம்சிடியின் டாக்டர் அஜய் குமாரின் பகுப்பாய்வின்படி.. மதியம் 20 முதல் 30 நிமிடங்கள் ஒரு சிறிய தூக்கம் மூளைக்கு மிகவும் ஓய்வெடுக்கிறது. ஒரு சிறிய தூக்கம் வேலை திறன் மற்றும் கவனத்தை மேம்படுத்துகிறது.

இரவில் நன்றாக தூங்காதவர்களுக்கு அல்லது அதிக உடல் செயல்பாடுகளைச் செய்பவர்களுக்கு, இந்த சிறிய தூக்கம் ஒரு ரீசார்ஜாக செயல்படுகிறது. இது மனதை அமைதியாக வைத்திருக்கிறது மற்றும் நாள் முழுவதும் உங்களை உற்சாகமாக உணர வைக்கிறது.


ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தூங்கினால் தீங்கு :

ஒரு பிற்பகல் தூக்கம் நன்மை பயக்கும் என்றாலும், ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அது தீங்கு விளைவிக்கும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தூங்குவது தலைவலி, சோம்பல் மற்றும் விழித்தவுடன் உடலில் கனமான உணர்வு போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்தும்.

மதியம் நீண்ட தூக்கம் எடுப்பது இரவில் தூங்குவதை கடினமாக்கும். இது உங்கள் வளர்சிதை மாற்றத்தை சேதப்படுத்தும். இது ஒரு பழக்கமாக மாறினால், உடல் செயல்பாடு குறைந்து, சோம்பல் படிப்படியாக அதிகரிக்கும்.


இரவில் தரமான தூக்கம் ஆரோக்கியமாக இருப்பதற்கு அவசியம் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் படுக்கைக்குச் சென்று எழுந்திருக்கும் பழக்கத்தை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். படுக்கைக்குச் செல்வதற்கு முன் மொபைல் போன்கள் மற்றும் டிவிகளைத் தவிர்க்க வேண்டும். இரவில் குறைவான மற்றும் இலகுவான உணவை உண்ண வேண்டும். காஃபின் நுகர்வு குறைக்க வேண்டும். படுக்கையறை அமைதியாகவும் இருட்டாகவும் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

மதியம் ஒரு தூக்கம் எடுக்க வேண்டியிருந்தால், அதை 20–40 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தவும். அது உங்கள் உடலின் தேவைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும், ஆனால் தூக்கத்தை ஒரு போதைப்பொருளாக மாற்ற வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



## சினிமா துளிகள்..!

### ‘ஜன நாயகன்’ மறு தணிக்கை இழுபறி; ரிலீஸ் ஆவதில் சிக்கல்!



அரசியல் கட்சி தொடங்கி சட்டசபை தேர்தலுக்காக தயாராகி வரும் விஜய்யின் கடைசி படம் என்று அறிவிக்கப்பட்டுள்ள ஜன நாயகன் திரைப்படம், மறுதணிக்கை முடிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மார்ச் 17–ஆம் தேதி (நேற்று) படத்தை மறுஆய்வு செய்ய வேண்டிய திருத்தக் குழு (Revising Committee) உறுப்பினர்கள், ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு வராததால் இந்த ஆய்வு நடைபெறவில்லை. ஹைதராபாத்தைச் சேர்ந்த ஜீவிதா ராஜசேகர் மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த டி.எஸ்.நாகபரணா ஆகிய இரு உறுப்பினர்களும் சென்னைக்கு வரவில்லை.

சென்னையில் உள்ள மத்திய திரைப்படத் தணிக்கை வாரிய (CBFC) அலுவலகத்தில் தற்போது வாரிய உறுப்பினர்கள் யாரும் இல்லை. எஸ்.வி.சேகரின் பதவிக்காலம் முடிவடைந்த பிறகு, அந்த இடத்திற்கு இன்னும் யாரும் நியமிக்கப்படவில்லை. இதனால் செவ்வாய் காலை முதல் மாலை 6 மணி வரை காத்திருந்த ஜன நாயகன் படக்குழுவினர் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பினர். முன்பு போலல்லாமல், இம்முறை தணிக்கைக் குழு அடுத்த மறுஆய்வுக்கான தேதியை அறிவிக்கவில்லை. இதற்கிடையில், ஜன நாயகன் படத்தின் ஓடிடி (OTT) உரிமையைப் பெற்றிருந்த நிறுவனம், திரையரங்கு வெளியீட்டிற்கான காலக்கெடு முடிந்ததால் ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ளது. இதனிடையே ஜன நாயகன் படத்தின் மறு தணிக்கை மும்பையில் நிறைவடைந்ததாகவும், படத்தில் அரசியல் தொடர்பான கருத்துக்கள் இருப்பதால், தேர்தல் ஆணைய அதிகாரிகள் பார்வையிட வேண்டும் என்று தணிக்கை வாரியம் செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# வரி செலுத்துவோருக்கு குட் நியூஸ்.. ஏப்ரல் 1 முதல் புதிய வருமான வரிச் சட்டம் அமல்!

புதுடெல்லி, மார்ச். 18–

இந்தியாவின் வரி முறையில் பல முக்கியமான மாற்றங்கள் ஏப்ரல் 1, 2026 முதல் நடைமுறைக்கு வரவுள்ளன.

ஏப்ரல் 1 2026 முதல் அமலாகும் வருமான வரி விதிகள் விவரம்?, பத்திர பரிவர்த்தனை வரி (STT) உயர்வு விவரங்கள் மற்றும் புதிய வருமான வரிச் சட்டம் 2025 மாற்றங்கள் போன்ற விவரங்களை பார்ப்போம்.




**புதிய வருமான வரிச் சட்டம் முக்கிய மாற்றங்கள்?**

‘Tax Year’ –இனி குழப்பம் வேண்டாம்!

புதிய சட்டத்தின் ஒரு முக்கிய மாற்றம் ‘வரி ஆண்டு’ (Tax Year) என்ற கருத்தை அறிமுகப்படுத்துவதாகும். இது இதற்கு முன்பு இருந்த ‘முந்தைய ஆண்டு’ (previous year) மற்றும் ‘வரி மதிப்பீட்டு ஆண்டு’ (assessment year) என்ற முறையை வச்சி குழம்பிட்டு இருந்தோம்ல?, ஆனால் இனி புதிய முறையின் கீழ், ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்பட்ட வரிகள் ‘வரி ஆண்டு’ (Tax Year) எனப்படும் ஒரே காலப்பகுதியின் கீழ் வரும். இந்த நடவடிக்கை வரி செலுத்துவோருக்கு வரி செயல்முறையை எளிமையாகவும் சுலபமாகவும் மாற்றும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**வருமான வரி அடுக்குகளில் மாற்றமில்லை**

தனிநபர்களுக்கான தற்போதைய வருமான வரி அடுக்கு விகிதங்களில் (Tax Slabs) அரசாங்கம் எந்த மாற்றமும் செய்யவில்லை. பழைய வரி முறை மற்றும் புதிய சலுகை வரி முறை ஆகிய இரண்டின் கீழும் வரி விகிதங்கள் அப்படியே இருக்கும். இதன் பொருள் பெரும்பாலான வரி செலுத்துவோருக்கு தனிநபர் வரிச் சுமையில் எந்த மாற்றமும் இருக்காது.

**புதிய ITR தாக்கல் காலக்கெடு**

வருமான வரி கணக்குகளை (ITR) தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவையும் மத்திய அரசாங்கம் மாற்றியமைத்துள்ளது.

ITR–1 மற்றும் ITR–2 போன்ற எளிய படிவங்களைத் தாக்கல் செய்யும் தனிநபர்களுக்கு ஜூலை 31 காலக்கெடுவே தொடரும்.

ஆனால் தணிக்கை (Audit) தேவையில்லாத வணிகம் அல்லது தொழிலில் ஈடுபட்டுள்ள வரி செலுத்துவோர், இனி ஜூலை 31–க்குப் பதிலாக ஆகஸ்ட் 31 வரை கால அவகாசம் பெறுவார்கள்.

கணக்குத் தணிக்கை தேவைப்படும் நிறுவனங்கள் மற்றும் வரி செலுத்துவோருக்கு அக்டோபர் 31 காலக்கெடுவாக இருக்கும்.

குறிப்பிட்ட விதிகளின் கீழ் வரும் சிறப்பு வழக்குகளுக்கு நவம்பர் 30 காலக்கெடுவாக இருக்கும்

**திருத்தப்பட்ட படிவம் தாக்கல் செய்யும் கால அவகாசம் நீட்டிப்பு**

திருத்தப்பட்ட வருமான வரி கணக்குகளை (Revised Returns) தாக்கல் செய்வதற்கான கால வரம்பும் நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்னதாக வரி செலுத்துவோர் வரி ஆண்டு முடிந்த ஒன்பது மாதங்களுக்குள் தங்கள் படிவத்தைத் திருத்த முடியும்.

ஆனால் புதிய சட்டத்தின் கீழ், இந்தத் திருத்தக் காலம் 12 மாதங்களாக அதிகரிக்கப்படும். இருப்பினும் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு படிவம் திருத்தப்பட்டால் கட்டணம் வசூலிக்கப்படும். வருமானம் ரூ. 5 லட்சம் வரை இருந்தால் கட்டணம் ரூ. 1000 ஆகவும், வருமானம் ரூ. 5 லட்சத்திற்கு மேல் இருந்தால் ரூ. 5000 ஆகவும் இருக்கும்.

**STT மற்றும் இதர வரி மாற்றங்கள்**

ஷேர் மார்க்கெட் முதலீட்டாளர்களுக்கு, பியூச்சர்ஸ் மற்றும் ஆப்ஷன்ஸ் (F&O) வர்த்தகத்திற்கான பத்திர பரிவர்த்தனை வரியை (STT) அரசாங்கம் அதிகரித்துள்ளது. விற்பனை செய்யப்படும் ஆப்ஷன்ஸ் (Options) மீதான STT 0.10 சதவீதத்திலிருந்து 0.15 சதவீதமாக உயரும். பியூச்சர்ஸ் (Futures) மீதான STT 0.02 சதவீதத்திலிருந்து 0.05 சதவீதமாக அதிகரிக்கும்.

பல பரிவர்த்தனைகளுக்கான மூலத்தில் வரி வசூல் (TCS) விகிதங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், பணியாளர் தனது வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே பயணம் செய்வதற்காக முதலாளி வழங்கும் செலவு, வரிக்குரிய சலுகையாகக் கருதப்படாது.

# கரூர் சம்பவம்: சிபிஐ விசாரணையில் முறையான பதிலை வழங்கியிருக்கிறேன் - செந்தில் பாலாஜி பேட்டி!

சென்னை, மார்ச். 18–

சிபிஐ விசாரணை நிறைவடைந்து சென்னை திரும்பிய செந்தில் பாலாஜியிடம், விசாரணை தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர் கூறியதாவது:–



செப்டம்பர் 27–ம் தேதி கரூரில் நடைபெற்ற துயர சம்பவம் குறித்து சிபிஐ அதிகாரிகள் சில கேள்விகளை முன் வைத்தனர். அந்த கேள்விகளுக்கு முறையான பதிலை வழங்கியிருக்கிறேன். குறிப்பாக சாட்சிகள் என்ற அடிப்படையில், அன்று நடைபெற்ற சில நிகழ்வுகள் குறித்து என்னிடம் கேள்விகளை முன் வைத்தனர். அந்த கேள்விகளுக்கு என்ன பதில் கூறினேன் என்பதை பொதுவெளியில் சொன்னால் சரியாக இருக்கிறது.

முறையான கேள்விகளுக்கு முறையான பதிலை வழங்கியிருக்கிறேன். சம்மனில் 10.30 மணியளவில் வர சொல்லி இருந்தனர். 10.15 மணிக்கு சென்று விட்டேன். 5 மணிக்கு விசாரணை நிறைவு பெற்றது. கேள்விகள் எண்ணிக்கை எத்தனை என்பது தெரியவில்லை.சிபிஐ அதிகாரிகளுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருந்திருக்கலாம். அதன் அடிப்படையில் அவர்கள் என்னை அழைத்திருக்கலாம். அங்கு களத்தில் இருந்து பணியாற்றிதன் அடிப்படையில், அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு முறையான பதில்களை வழங்கியுள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# குடியிருப்பில் தீ பற்றி மத்திய பிரதேசம், டில்லியில் தலா 7 பேர் பலி!

புதுடெல்லி, மார்ச். 18–

மத்திய பிரதேசத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு வீட்டில் தீ பற்றியதில் 7 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். அதேபோல் டில்லியிலும் குடியிருப்பு பகுதியில் தீ பற்றியதில் 3 குழந்தைகள் உட்பட 7 பேர் பலியாகினர்.

மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் உள்ள பிரிஜேஸ்வரி அனெக்ஸ் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இன்று (மார்ச் 18) அதிகாலை திடீரென தீ பற்றியது. பிறகு குடியிருப்பு முழுவதும் தீ மள மளவென பரவியது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு தீயணைப்பு படையினர் மற்றும் போலீசார் விரைந்தனர். இதைத் தொடர்ந்து நீண்ட நேரம் போராடி தீயை கட்டுப்படுத்தினர்.

இந்த சம்பவத்தில் 7 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். தீ பற்றியதற்கான காரணம் குறித்து தற்போது விசாரணை நடந்து வருகிறது. இது குறித்து போலீசார் கூறியதாவது: தீ பற்றிய வீட்டிலிருந்து 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. மீட்புப் பணிகள் நிறைவடைந்துவிட்டன. தீ முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

தீ பற்றி அடுக்குமாடி குடியிருப்பில் வைக்கப்பட்டிருந்த 10க்கும் மேற்பட்ட காஸ் சிலிண்டர்கள் வெடித்ததால் தீ மேலும் தீவிரமடைந்தது. இதுவே பலி எண்ணிக்கை அதிகரிக்க காரணம் என்பது போலீசார் விசாரணையில் தெரியவந்தது.

**டில்லியில் 7 பேர் பலி**

அதேபோல், டில்லி பாலம் பகுதியில் குடியிருப்பு வளாகத்தில் திடீரென தீப்பற்றியது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு தீயை அணைக்கவும், உள்ளே சிக்கியவர்களை மீட்கவும் தீயணைப்பு வீரர்கள் விரைந்தனர். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நடந்தன. ஆனாலும், தீயில் கருகி 3 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

# உடல் எடையை குறைப்பதற்கான 3 மருந்துகளுக்கு ஒப்புதல்- மாநிலங்களவையில் மத்திய மந்திரி தகவல்!

புதுடெல்லி, மார்ச். 18–

எடை குறைப்பு மருந்துகள் தொடர்பாக பாராளுமன்ற மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய சுகாதாரத்துறை மந்திரி அனுப்பிரியா படேல் பதிலளித்தார். அவர் கூறியதாவது:–



நாட்டின் உச்சபட்ச மருந்து ஒழுங்குமுறை அமைப்பான மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பு எடை குறைப்பு சிகிச்சைக்கான 3 மருந்துகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இம்மருந்துகள் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் சில்லறை மருந்து கடைகளில் விற்கப்படும்.

எடையை குறைக்கவோ அல்லது வளர்சிதை மாற்ற விகிதத்தை மாற்றுவதாகவோ கூறும் மருந்துகள், மருத்துவ பரிசோதனை விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என மருந்து நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த விதிகள் மீறப்பட்டால் மாநில உரிமம் வழங்கும் அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

உடல்நல பிரச்சனைகளுக்கு வழி வகுக்கக்கூடிய மருந்துகளின் பயன்பாட்டை ஒழுங்குப்படுத்தவும், அவற்றை முறையற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## ரயில் டிரைவர் ஆகணுமா? வந்தாச்சு உதவி லோகோ பைலட் அறிவிப்பு! 11,127 பணியிடங்கள்..!

ரயில்வே தேர்வர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் அறிவிப்பு ஒன்றை ரயில்வே தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது.

ரயில்வே உதவி லோகோ பைலட் (ALP) பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. மொத்தம் 11,127 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன..

**கல்வித் தகுதி:**

பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியுடன் ஐடிஐ முடித்து இருக்க வேண்டும். ஐடிஐ–யில் எலக்ட்ரீஷியன், மெக்கானிக் , எலக்ட்ரானிக்ஸ் மெக்கானிக், மெக்கானிக், இன்ஸ்ட்ருமென்ட் மெக்கானிக், மில் ரைட் / மெயிண்டனன்ஸ் மெக்கானிக், வைர்மேன், டிராக்டர் மெக்கானிக், ஆர்மேச்சர் & காயில் வைண்டர், மெக்கானிக், ரெஃப்ரிஜரேஷன் & ஏர் கண்டிஷனிங் மெக்கானிக், ஹீட் என்ஜின் (Heat Engine), டர்னர் மெஷினிஸ்ட் ஆகிய பிரிவுகளை படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

2 அல்லது 3 ஆண்டுகள் கொண்ட டிப்ளமோ முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம். மெக்கானிக்கல் என்ஜினியரிங், எலக்ட்ரானிக்ஸ் என்ஜினியரிங், எலக்ட்ரிக்கல் என்ஜினியரிங், ஆட்டோமொபைல் என் ஜினியரிங் உள்ளிட்ட பாடப்பிரிவுகளை முடித்தவர்களை விண்ணப்பிக்கலாம். மேற்கண்ட பிரிவில் என்ஜினியரிங் முடித்தவர்களும் விண்ணப்பிக்காலம்.

**வயது வரம்பு:**

உதவி லோகோ பைலட் (ALP) பணிக்கு 18 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். அரசு விதிகளை பின்பற்றி வயது உச்ச வரம்பில் தளர்வுகள் அளிக்கப்படும். எஸ்சி/எஸ்டி பிரிவினர் என்றால் 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினர் என்றால் 3 ஆண்டுகளும் பொதுப்பிரிவு மாற்றுத்திறனாளிகளுக்கு 10 வருடங்களும் தளர்வு அளிக்கப்படும்.

**தேர்வு முறை :**

தேர்வு முறையை பொறுத்தவரை சிபிடி எனப்படும் கணினி வழி தேர்வு நடைபெறும். சிபிடி 1, சிபிடி2 மற்றும் சிஏபிடி எனப்படும் கணினி அடிப்படையிலான அப்டிடியூட் தேர்வுக்குக்கு பிறகு தேர்வர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். பணியாணைக்கு முன்பாக சான்றிதழ் சரிபார்ப்பு, மருத்துவ பரிசோதனையும் நடைபெறும். முதல் இரண்டு கட்ட தேர்வு (சிபிடி) தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆங்கிலம் என 15 மொழிகளிலும் நடைபெறும். சிபிஎடி தேர்வு ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே நடைபெறும்

**விண்ணப்பிக்கும் முறை:**

தகுதியான விண்ணப்பதாரர்கள் வரும் 15.05.2026 முதல் 14.06.2026 வரை விண்ணப்பிக்கலாம். www.rrbapply.gov.in/என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

## தமிழ்நாடு உப்பு கழகம் – 6 காலியிடங்கள்!

அமைப்பின் பெயர்: தமிழ்நாடு உப்புக் கழகம் (TNSC)

அறிவிப்பு எண்: சேவை ஒப்பந்தம் / 2026 தேதி: 16.03.2026

வேலை வகை: தமிழ்நாடு அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படை

காலியிடங்களின் மொத்த எண்ணிக்கை: 06 Dy Manager, AE , Supervisors இடுகைகள்

இடுகையிடும் இடம்: சென்னை, ராமநாதபுரம்

தொடக்க நாள்: 16.03.2026

கடைசித் தேதி: 31.03.2026 மாலை 05.00 மணிக்கு

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tnsalt.com/

என்.சி.ஆர்.ஏ டி.ஐ.எஃப்.ஆர் – ரேடியோ வானியற்பியலுக்கான தேசிய மையம்: – 6 காலியிடங்கள்

அமைப்பின் பெயர்: NCRA TIFR ரேடியோ வானியற்பியல் தேசிய மையம்

அறிவிப்பு எண்: 2026/01, 2026/02, 2026/03, 2026/04, 2026/05

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 38 எழுத்தர்–A, பணி உதவியாளர், அறிவியல் உதவியாளர்–B, தொழில்நுட்ப உதவியாளர்–B, ஆய்வக உதவியாளர்–B, பொறியாளர்–C, தொழில்நுட்பப் பயிற்சியாளர், நிர்வாகப் பயிற்சியாளர், திட்டப் பொறியாளர்–C மற்றும் பொறியாளர் பயிற்சியாளர் பணியிடங்கள்

பணியிடங்கள்: புனே, கோடாட், ஊட்டி

தொடங்கும் தேதி: 20.02.2026

கடைசி தேதி: 20.03.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: http://www.ncra.tifr.res.in/

## சென்னை துறைமுக ஆணைய காலியிடங்கள்!

அறிவிப்பு எண்: IPA/ChPA/2026/01

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்கள்: 13 நல அலுவலர், சட்ட அலுவலர் (நிலை–I), மூத்த கணக்கு அலுவலர், துணைப் போக்குவரத்து மேலாளர், செயற்பொறியாளர் (இயந்திரவியல்), உதவி செயற்பொறியாளர் (மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு), உதவி மேலாளர் (நூலகம்), உதவி மேலாளர் (EDP), தீயணைப்பு அலுவலர் மற்றும் உதவிப் பாதுகாப்பு அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர் (மாசு கட்டுப்பாடு) ஆகிய பதவிகள்

பணியிட மாற்றம்: சென்னை

தொடங்கும் தேதி: 26.02.2026

கடைசி தேதி: 19.03.2026

விண்ணப்பிக்கும் முறை: இணையவழி

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://chennaiport.gov.in





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## தி.மு.க. கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் - ஒப்பந்தம் கையெழுத்து!



சென்னை, மார்ச். 18–

சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழலில், தி.மு.க. கூட்டணி கட்சிகளுடனான தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் வரை ஒதுக்க தி.மு.க. விருப்பம் தெரிவித்திருந்தது.

அதே சமயம், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில், கடந்த தேர்தலில் ஒதுக்கிய 6 தொகுதிகளை ஒதுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பாக ஏற்கனவே 3 கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட நிலையில், 4–வது கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தையில் தி.மு.க.–இந்திய கம்யூனிஸ்ட் இடையே தொகுதி பங்கீடு தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது. இதன்படி தி.மு.க. கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தொகுதி பங்கீடு ஒப்பந்தத்தில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் கையெழுத்திட்டனர். தி.மு.க. கூட்டணியில் இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள், ம.தி.மு.க.வுக்கு 4 தொகுதிகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிக்கு 2 தொகுதிகள், கொ.ம.தே.க.வுக்கு 2 தொகுதிகள், ம.ம.க.வுக்கு 2 தொகுதிகள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 4 முனைப்போட்டி யாருக்கு சாதகம்..?

சென்னை, மார்ச். 18–

தி.மு.க. கூட்டணிக்கு எப்போதுமே சிறுபான்மையினர் வாக்குகள் பக்க பலமாக இருக்கும். தற்போதும் அந்தக் கூட்டணியில் 4 இஸ்லாமிய கட்சிகளும், பல கிறிஸ்தவ அமைப்புகளின் ஆதரவும் இருப்பதால், இந்த முறையும் எப்போதும் போல் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் கிடைக்கும் என்று அக்கட்சி எதிர்பார்க்கிறது.

**அ.தி.மு.க. கூட்டணிக்கு சிக்கல்**

அ.தி.மு.க.வை பொறுத்தவரை கடந்த தேர்தலைப்போல, இந்த முறையும் பா.ஜ.க., பா.ம.க., த.மா.கா. ஆகிய கட்சிகள் கூட்டணியில் இடம்பெற்றுள்ளன. கூடுதலாக அ.ம.மு.க.வும் இடம்பெற்றுள்ளது. என்றாலும், கடந்த முறை ஒருங்கிணைந்த பா.ம.க.வாக இருந்தது, இந்த முறை டாக்டர் ராமதாஸ் தலைமையில் மற்றொரு அணியாக செயல்படுவது வன்னியர்கள் வாக்குகளை சிதைக்கும் என்றே தெரிகிறது. தனித்து போட்டியிடும் முடிவுடன் டாக்டர் ராமதாஸ் வடமாவட்டங்களில் மட்டும் வேட்பாளர்களை களம் இறக்கினால், அது அ.தி.மு.க. கூட்டணிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலும், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இடம்பெற்றிருப்பதால், சிறுபான்மையினர் வாக்குகள் கிடைப்பது சந்தேகம் தான். கடந்த தேர்தலில், “தங்களுடைய தோல்விக்கு சிறுபான்மையினர் வாக்கு கிடைக்காமல் போனதுதான் காரணம். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்ததால் அந்த நிலை ஏற்பட்டது” என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சிலர் கூறினார்கள். அதே நிலை மீண்டும் தொடர்ந்தால், .தி.மு.க. கூட்டணிக்கு வாக்குகள் அதிகம் கிடைப்பது சிக்கல்தான்.

**தாக்கத்தை ஏற்படுத்தும் விஜய்**

சட்டசபை தேர்தலில் புது வரவான த.வெ.க.வுக்கு முதல் தலைமுறை வாக்காளர்கள், இளம் வாக்காளர்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு இருக்கிறது. அந்தக் கட்சியினுடைய இலக்கே ‘வீட்டுக்கு ஒரு ஓட்டு’ என்பதுதான். அதாவது, தமிழ்நாட்டில் உள்ள ரேஷன் கார்டுகள் கணக்குப்படி, 2¼ கோடி வாக்குகளை அக்கட்சி குறிவைத்துள்ளது.

மேலும், ஆளுங்கட்சியையும், ஆண்ட கட்சியையும் விரும்பாதவர்கள் த.வெ.க.வுக்கு வாக்களிப்பார்கள் என்று கூறப்படுகிறது. மேலும், சிறுபான்மையினர், கிறிஸ்தவ வாக்குகளும் விஜய்–க்கு இந்த முறை கிடைக்கும் என்று தெரிவதால், அவரும் தேர்தலில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று கூறப்படுகிறது. த.வெ.க. வின் வருகை தி.மு.க. கூட்டணியின் வாக்கு சதவீதத்தையும் சிதைக்கும் என தெரிகிறது.



**நாம் தமிழர் கட்சிக்கு பாதிப்பு?**

இதேபோல், கடந்த 2 சட்டசபை தேர்தலில் தனித்து போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி, இந்த முறையும் தனித்தே களம் காண்கிறது. தேர்தலுக்கு தேர்தல் அதிகரித்து வந்த நாம் தமிழர் கட்சியின் வாக்கு சதவீதம் தற்போதைய நிலையில் 7 சதவீதத்திற்கு மேல் உள்ளது.

இது வரும் தேர்தலில் இரட்டை இலக்கத்தை தொடும் என்று அக்கட்சியினர் கூறிவருகின்றனர். என்றாலும், நாம் தமிழர் கட்சிக்கும் முதல் தலைமுறை வாக்காளர்கள் மற்றும் இளம் வாக்காளர்களின் ஓட்டுகளே அதிகம் கிடைத்துவருவதால், த.வெ.க.வின் வருகையால் இந்தக் கட்சிக்கும் பாதிப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

**இழுபறி நிலை நீடிக்கலாம்**

மொத்தத்தில், நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. இடையேதான் கடும் போட்டி நிலவும் என்று தெரிகிறது. ஆளப்போகும் கட்சிக்கு மெஜாரிட்டிக்கு தேவையான 118 தொகுதிகள் கூட கிடைக்க முடியாத அளவுக்கு இழுபறி நிலை நீடிக்கலாம் என்றும் கூறப்படுகிறது. அந்த அளவுக்கு விஜய் தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று சொல்லப்படுவதால், ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிபோல், சட்டசபை தேர்தல் முடிவும் பரபரப்பாகவே அமையும்.

## விசில் சத்தம் கேட்டால் நம் வெற்றி உறுதி - ஓபிஎஸ் பேச்சு!



நெல்லை, மார்ச். 18–

திருநெல்வேலி சட்டசபை தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் ஓ.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு பேசியதாவது:

எடப்பாடி பழனிசாமி அதிமுகவின் பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற பிறகு சந்தித்த சட்டசபைதேர்தல், நாடாளுமன்ற தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் என 11 தேர்தல்களில் தொடர்ந்து தோல்வி அடைந்துள்ளார். அதிமுகவின் அடிப்படைத் தொண்டர்கள்தான் பொதுச்செயலாளரைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற விதி கொண்டு வரப்பட்டது. ஆனால், ஆணவப்போக்கால் இந்த விதியில் திருத்தங்களைக் கொண்டு வந்து, தொடர்ந்து 10 ஆண்டு காலமாக பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி நீடிக்கிறார். அதிமுகவை குழிதோண்டி புதைத்த பாவம் எடப்பாடி பழனிசாமிக்கும் அவருடன் சேர்ந்து பயணிக்கும் ஆர்.பி. உதயகுமாருக்கும் சென்று சேரும். மக்களவைத் தேர்தலில் என்னைத் தோற்கடிக்க 6 ஓ. பன்னீர் செல்வங்களை அவர் நிறுத்தினார்.

தர்ம யுத்தத்தில் தொடங்கிய என்னுடைய வலிமையை அறிந்துகொள்வதற்காகவே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டேன். விசில் சத்தம்தான் நம் தேசிய கீதம்; விசில் சத்தம் கேட்டால் வெற்றி நிச்சயம். உலகை ஆளும் 9 கோள்களில் யாராலும் வெல்ல முடியாதது சூரியன். மத்திய அரசு போதிய நிதியை ஒதுக்காவிட்டாலும் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைப்படவில்லை. மத்திய அரசின் பொருளாதார வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் வளர்ச்சி அதிகம். வெளிநாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்த்து, மதுரை, ராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை முதல்வர் மு.க. ஸ்டாலின் ஏற்படுத்தியுள்ளார். இளைஞர்களுக்கு மாவட்டத்திற்குள்ளாகவே வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளார். திராவிட மாடலின் ஆட்சி வரும் தேர்தலிலும் வெற்றி பெற்று தொடர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கூட்டணி பேச்சுவார்த்தை... இ.பி.எஸ். - நயினார் சந்திப்பு?



சென்னை, மார்ச். 18–

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை இன்று மாலை பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தொகுதிப் பங்கீடு இன்னும் இறுதியாகாத நிலையில் எடப்பாடி பழனிசாமியை மத்திய இணை அமைச்சர் எல். முருகன் மற்றும் நயினார் நாகேந்திரன் சந்திப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க.விற்கு 27 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் வருகிற 20–ந்தேதி கையெழுத்தாக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. முன்னதாக, கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு தொடர்பாக நிர்வாகிகள் மற்றும் வியூக வகுப்பாளர்களுடன் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று முக்கிய ஆலோசனையில் ஈடுபட உள்ளார். ஒரே தொகுதியை ஒன்றுக்கும் மேற்பட்ட கட்சிகள்மாறிமாறிக்கேட்பது குறித்து ஆலோசிக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

## யாருடன் கூட்டணி..? தைலாபுரம் இல்லத்தில் ராமதாஸ் ஆலோசனை!



விழுப்புரம், மார்ச். 18–

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதி, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை தேர்தல் ஆணையம் கடந்த ஞாயிறன்று அறிவித்தது. இதன்படி, ஏப்ரல் 23–ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4–ந்தேதி நடைபெறும். இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், தைலாபுரம் தோட்டத்தில் நடைபெறும் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமை நிர்வாகக்குழு கூட்டத்தில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் நேற்று அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்படி, விழுப்புரத்தில் உள்ள தைலாபுரம் இல்லத்தில் ராமதாஸ் தலைமையில் இன்று நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில் ஜி.கே.மணி, ஸ்ரீகாந்தி உள்பட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

2026 தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியா? தனித்துப் போட்டியா? என்பது குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒருபுறம் அன்புமணி அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்ததையடுத்து, ராமதாஸ் தரப்புக்கு நெருக்கடி அதிகரித்துள்ள சூழலில், இந்த கூட்டம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள் விருப்ப மனு கொடுக்கலாம் - வி.கே.சசிகலா அறிவிப்பு!



சென்னை, மார்ச். 18–

சட்டசபை தேர்தலில் போட்டியிட விரும்புவர்கள் இன்று முதல் விருப்ப மனு தாக்கல் செய்யலாம் என்று அ.இ.பு.த.ம.மு.க கட்சி நிர்வாகி வி.கே.சசிகலா அறிவித்துள்ளார். இதில் பொது தொகுதிக்கு ரூ5000 கட்டணமாகவும், தனி தொகுதிக்கு ரூ3000 கட்டணமாகவும் வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாஜகவுடன் கூட்டணியா? 90 சீட், 2.5 வருடம் முதல்வர் என பேரம் பேசினாங்க - ஆதவ் அர்ஜுனா!



சென்னை, மார்ச். 18–

தவெகவுடன் பாஜக கூட்டணி பேச்சுவார்த்தை நடத்துவதாக தகவல் வெளியான நிலையில் தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா விளக்கம் அளித்துள்ளார்.

கொளத்தூரில் நேற்று நடந்த த.வெ.க. பொதுக்கூட்டத்தில் பேசிய ஆதவ் அர்ஜுனா, “த.வெ.க. 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுகிறது. பல ஆஃபர்களை த.வெ.க. தலைவர் விஜய்க்கு கொடுத்தார்கள். ஆனால், அனைத்து ஆஃபர்களையும் விஜய் நிராகரித்துவிட்டார். 90 தொகுதிகள் தருவதாக பேரம் பேசினார்கள்.

ஆளுக்கு இரண்டரை ஆண்டுகள் முதல்வராக இருக்கலாம் என பேரம் பேசினார்கள். பதவிக்காக டெல்லிக்கு அடிபணிய மாட்டோம்” என்று தெரிவித்தார்.

## 1.68 லட்சம் சுவர் விளம்பரங்கள் நீக்கம்: தலைமை தேர்தல் அதிகாரி தகவல்!



சென்னை, மார்ச். 18–

மாநிலம் முழுதும், 1.68 லட்சம் சுவர் விளம்பரங்கள் நீக்கப்பட்டு உள்ளன என்றும், குற்றவியல் நடவடிக்கை தொடர்வதற்காக, 61 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன என்றும், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஒரு வேட்பாளர் அதிகபட்சமாக, 40 லட்சம் ரூபாய் வரை மட்டுமே தேர்தலில் செலவு செய்ய வேண்டும். வேட்பாளரின் செலவுகளை கண்காணிப்பதற்காக, பல்வேறு செலவின கண்காணிப்பு குழுக்கள், மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு, மாவட்ட தேர்தல் அலுவலரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன

தேர்தல் கண்காணிப்பு பணிகளை தீவிரமாக்க, 234 சட்டசபை தொகுதிகளிலும் பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழுக்கள் மட்டுமின்றி, 25 துறை சார்ந்த கண்காணிப்பு குழுக்களும் இடம் பெற்றுள்ளன. இதில் வருமான வரி, அமலாக்கம், சுங்கத்துறை உள்ளிட்டவையும் அடங்கும்

தற்போது, 234 தொகுதிகளிலும், தொகுதிக்கு ஒன்பது பறக்கும் படைகள், ஒன்பது நிலை கண்காணிப்பு குழுக்கள் என்ற விகிதத்தில், தமிழகம் முழுதும் 2,160 பறக்கும் படைகள், 2,160 நிலை கண்காணிப்பு குழுக்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன

இக்கண்காணிப்பு குழுக்கள் வாயிலாக நேற்று வரை, 23.2 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. பொது மக்கள் புகார் தெரிவிப்பதற்கு வசதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, பொது மக்கள் அளிக்கும் புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

தேர்தல் நடத்தை விதிகள், அனைத்து தரப்பினராலும் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்று, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

அதன்படி, நேற்று வரை மாநிலம் முழுதும், 1.68 லட்சம் சுவர் விளம்பரங்கள் நீக்கப்பட்டுள்ளன. குற்றவியல் நடவடிக்கை தொடர்வதற்காக, 61 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

தேர்தல் நடத்தை விதிகளின்படி, மறைந்த தலைவர்களின் சிலைகளை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. தற்போது, அரசியல் களத்தில் உள்ள தலைவர்களின் புகைப்படங்கள், பொது இடங்களிலோ, அரசு கட்டடங்களிலோ வைக்கப்பட்டு இருந்தால் அவற்றை மறைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் டைமன்ராஜா அளித்துள்ள மனு: நடைமுறையில் உள்ள 50,000க்கும் மேற்பட்ட ரொக்க பரிமாற்ற கட்டுப்பாடுகள், வணிகர்களை பெருமளவில் பாதிப்புக்குள்ளாக்கி உள்ளது.

முந்தைய நாள் ஈட்டிய வருவாயில், அதிகாலையில் மொத்த சந்தைகளில் வணிகர்கள் பொருட்களை வாங்குகின்றனர். இவர்கள் ரொக்க பரிமாற்றத்தையே நம்பியுள்ளனர். இன்றைய சூழலில், 50,000 ரூபாய் என்பது மிக குறைந்த தொகை. இதை எடுத்துச் செல்லும் வணிகர்களை விசாரணை கூண்டில் நிறுத்துவது, அவர்களின் அன்றாட வாழ்வாதாரத்தை பாதிக்கும். தேர்தல் முறைகேடுகளுக்கு எடுத்துச் செல்லும் பணத்தை கண்டறியும் நவீன உத்திகள், காவல் துறைக்கும், தேர்தல் கமிஷனுக்கும் நன்றாக தெரியும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விஜய் களம் இறங்குவதால் வி.ஐ.பி. தொகுதியாக மாறும் பெரம்பூர்!




சென்னை, மார்ச். 18–

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளில் மிகப்பெரிய தொகுதியாக பெரம்பூர் உள்ளது. இங்கு 2 லட்சத்து 21 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். கிறிஸ்தவர்கள் அதிகம் உள்ள இந்த தொகுதியில் மற்ற சமூகத்தினரும் கணிசமாக இருக்கிறார்கள். சுமார் 30 ஆயிரம் கிறிஸ்தவ வாக்காளர்களும் 10 ஆயிரம் மேற்பட்ட முஸ்லிம் வாக்காளர்களும் இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கிறது.

பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் தலித், வன்னியர், நாடார், நாயுடு சமூகத்தினர் குறிப்பிடும் படியாக வசிக்கிறார்கள்.

கடந்த காலங்களில் பெரம்பூர் தொகுதி கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த 2 சட்டசபை தேர்தலில் தி.மு.க. போட்டியிடுகிறது. தற்போது இந்த தொகுதியில் தி.மு.க. எம்.எல்.ஏ.வாக ஆர்.டி.சேகர் உள்ளார்.

இந்த தொகுதியில் த.வெ.க. தலைவர் விஜய் போட்டியிடுவதாக திட்டமிட்டு அதற்கான களப் பணிகள் தொடங்கியுள்ளன. த.வெ.க.வில் உள்ள முக்கிய நிர்வாகிகள் சென்னையில் களம் இறங்க உள்ளனர்.

விஜய் பெரம்பூர் தொகுதியை தேர்வு செய்ததற்கான காரணம், இந்த தொகுதியில் அதிக உறுப்பினர்கள் த.வெ.க.விற்கு இருப்பதாக கூறப்படுகிறது.

அதன் அடிப்படையில் மட்டுமில்லாமல் கிறிஸ்தவர்களும் கணிசமாக இருப்பதால் இத்தொகுதியில் களமிறங்க விஜய் முடிவு செய்துள்ளார்.

பெரம்பூரில் நிற்க வேண்டும் என்று கட்சியின் முக்கிய நிர்வாகிகளும் வற்புறுத்தி வருகின்றனர். அதன் காரணமாகவே விஜய், பெரம்பூர் தொகுதியை தேர்வு செய்து இருப்பதாக தெரிகிறது.

விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட இருப்பதால் அந்த தொகுதி வி.ஐ.பி. தொகுதியாக மாறி வருகிறது. அதனால் தேர்தல் அதிகாரிகள் மற்றும் போலீஸ் துறையினர் அதற்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டி உள்ளது.

இந்த நிலையில் விஜய் கட்சியினர் தேர்தல் பணியை அங்கு தொடங்கி விட்டனர். தேர்தல் பணிமனை அமைக்கும் பணி கண்ணதாசன் நகர் மின்சார வாரியம் எதிரே அமைக்கப்படுகிறது. கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் இந்த பணியில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

விஜய் வடசென்னையின் முக்கிய தொகுதியாக கருதப்படும் பெரம்பூரில் நிற்பதால் தொகுதியில் களை கட்டத் தொடங்கியுள்ளது.

ஆளும் கட்சியான தி.மு.க. மற்றும் எதிர்க்கட்சியான அ.தி.மு.க. நிர்வாகிகளும் சம பலத்துடன் களத்தில் இறங்கி உள்ளனர். தி.மு.க. மாவட்ட செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான ஆர்.டி சேகர் இத்தொகுதியில் வேட்பாளராக மீண்டும் நிறுத்தப்படுவதால் கட்சியினர் ஆயத்தப் பணிகளை தொடங்கியுள்ளனர்.

கொடுங்கையூர் எம்.ஆர்.நகரில் தேர்தல் பணிமனை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதேபோல சிட்கோ மெயின் ரோட்டிலும் ஒரு தேர்தல் பணிமனை அமைக்கப்பட இருக்கிறது.

அ.தி.மு.க. சார்பிலும் இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. ஓரிரு நாட்களில் தேர்தல் அலுவலகம் அமைக்கும் பணி தொடங்க உள்ளது.

பொதுவாக சட்டசபை பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க.–அ.தி.மு.க. இடையே கடுமையான போட்டி ஏற்படும். ஆனால் இந்த தேர்தல் களத்தில் விஜய் புதிதாக இறங்கி இருப்பதால் பரபரப்புக்கு பஞ்சமில்லை.

தி.மு.க.–அ.தி.மு.க. கூட்டணி கட்சி தொண்டர்கள் வரிந்து கட்டிக் கொண்டு தேர்தல் களத்தில் இறங்கி உள்ளனர். மக்களை சந்தித்து ஓட்டுகளை வேட்டையாட வியூகம் வகுத்து வருகின்றனர்.

பெரம்பூர் தொகுதியில் 7 வார்டுகள் உள்ளன. இந்த வார்டுகளில் உள்ள மக்களை சந்தித்து வாக்குகளை அறுவடை செய்வதில் திமுக, அ.தி.மு.க., த.வெ.க., நாம் தமிழர் கட்சி இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020